**தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய 4/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிறுவனத்திற்கு சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தமை, உள்ளுராட்சி உதவி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆம் திகதிய LGD/10A/4/நகி/2019 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் காண்பிக்கப்பட்ட போதும் மாநகர சபையினால் 2021 ஆம் ஆண்டின் போதும் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்குரிய குழுவொன்று நியமிக்கப்பட்டதன் பின்னர் இந்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் தாமதமின்றி நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள், பொருத்திகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி | நாட்டில் காணப்பட்ட கொரோன நிலைமையுடன் 2021 ஆம் ஆண்டில் | காணி, கட்டிடங்கள், வீதிகள் மற்றும் பாலங்கள் ஏனைய உட்கட்டமைப்பு |

| | | | |
|---|---|---|---|
| | மென்பொருள் என்பவற்றின் பெறுமதி மீள்மதிப்பீடு செய்யப்படாமல் முன்னைய ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட மீதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே காணி, கட்டிடங்கள், வீதிகள் மற்றும் பாலம், ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றினதும் பெறுமதி காண்பிக்கப்பட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகணரங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அநேகமான மாதங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன் இந்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் செய்து கொள்வதற்கு முடியாதிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக மீள்மதிப்பீடு செய்து சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | வசதிகள் போன்றவைகளின் பெறுமதி காண்பித்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரிகன் 2021 பெப்ரவரி 12 ஆம் திகதிய LGD/10A/4/நகி/2019 ஆம் இலக்க கடிதத்தின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியை கவனத்தில் கொள்ளாமல் அந்த ஆண்டின் போது பெறுமானத்தேய்வு செய்யப்படாதிருந்ததுடன், அகற்றப்படுகின்ற ஆண்டில் முழுமையான ஆண்டிற்காகவும் பெறுமானத் தேய்வு செய்ய வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு முரணாக 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டமைக்காக ரூபா 1,879,805 தொகை ஆண்டின் பெறுமானத் தேய்வாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டிலும், அதற்கு முன்னரும் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டின் போது பெறுமானத் தேய்வு செய்தல் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வை கணக்கீடு செய்யும் போது ஏற்பட்டுள்ள தவறை ஏற்றுக்கொள்கின்றோம். அது 2022 ஆம் ஆண்டின் போது சரி செய்து கணக்கீடு செய்யப்படும் என அறியத்தருகின்றோம். | சொத்துக்கள் கொள்வனவு செய்த ஆண்டின் போது பெறுமானத் தேய்வு செய்ய முடியாதிருந்ததுடன், விற்றுத் தீர்க்கப்படுகின்ற முழுமையான ஆண்டிற்காகவும் பெறுமானத் தேய்வு செய்து சரி செய்வதற்கு சரி செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 201,869,692 ஆக இருந்த போதிலும் குறிப்பு இலக்கம் 16 இன் படி ஆதனங்கள், பொறிகள் | கணனிமயப்படுத்தும் போது ஏனைய பெறுமதியொன்று பிழையாக கணக்கீடு செய்யப்பட்டமையால் இந்த தவறு ஏற்பட்டிருந்தது. 2022 | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் சரியான பெறுமதி சரி செய்து கணக்கீடு செய்யப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி ரூபா 681,718,519 ஆனமையால் ரூபா 479,848,827 தொகை குறைத்து நிதிக் கூற்றுக்களின் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆம் ஆண்டின் போது சரிசெய்து கணக்கீடு செய்யப்படும் என அறியத்தருகின்றோம். | வேண்டும். |
| (உ) | 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 1,744,566 பெறுமதியான நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களுடன் பெறுமதி காண்பித்து நூலக புத்தகங்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்காக பெறுமானத் தேய்வும் செய்யப்பட்டிருக்கவில்லை. | நூலக புத்தகங்கள் தற்போது நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், அது தொடர்பாக கவனத்தில் கொண்டு 2022 ஆம் ஆண்டின் போது சரி செய்து கணக்கு வைக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நூலக புத்தகங்கள் சொத்துக்களாக ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல் ரூபா 89,833,747 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான முதலீட்டு செய்பாடுகளில் இருந்து காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 120,124,808 ஆனமையால் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல் ரூபா 3,029,061 தொகை குறைத்து பதியப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ஏற்பட்டிருந்த வேறுபாடுகளை சரி செய்ததன் பின்னர் காசு பாய்ச்சல் கூற்றில் உள்ள ரூபா 89,833,747 தொகை காசுப் பாய்ச்சலை சரி செய்ய முடியும் என அறியத்தருகின்றோம். | காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகள் சரியாக கணிப்பிடப்பட்டு அறிக்கையிடப்படல் வேண்டும். |
| (எ) | நிதிக் கூற்றுக்களுக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கீடு செய்யும் போது செலுத்த வேண்டிய தரப்பினர், செலுத்த வேண்டிய தொகை, செலுத்த வேண்டிய தலைப்பு சரியான பிரகாரம் இனங்காணப்படாமல் கணக்கீடு செய்யப்பட்டமையால், மீளாய்வாண்டின் போது கடன் கொடுத்தோர் மிகை ஒதுக்கீடுகளுக்காக திரண்ட நிதியத்தில் ரூபா 101,000,493 செலவு வைத்தல் மற்றும் கடன் கொடுத்தோர் பற்றாக்குறை ஒதுக்கீடுகளுக்காக ரூபா 171,504,093 வரவு வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யும் போது வரவு செலவு குறிப்புக்கள் மாற்றி பதியப்பட்டதால் இந்த தவறு ஏற்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் போது சரி செய்து கணக்கு வைக்கப்படும் என அறியத்தருகின்றோம். | கடன் கொடுத்தோர் நிதி ஏற்பாட்டை கவனத்தில் கொள்ளும் போது செலுத்த வேண்டிய தரப்பினர், செலுத்த வேண்டிய தொகை, செலுத்த வேண்டிய செலவின தலைப்பு சரியான இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் இறுதியில் பட்டோலையின் பிரகாரம் நிலுவை கடை வாடகை மீதி ரூபா 9,210,258 | கணக்கீட்டு குறைபாடுகள் தொடர்பாக கவனத்தில் | பட்டோலையின் பிரகாரம் நிலுவை வருமானம் சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அந்த மீதி ரூபா 477,134 ஆனமையால் பெறவேண்டிய மீதி ரூபா 8,733,124 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கொண்டு 2022 ஆம் ஆண்டின் போது சரி செய்து கணக்கீடு செய்யப்படும் என அறியத்தருகின்றோம். | கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டிற்காக மூலதன மானியமாக ரூபா 6,275,322 பெற்றுக் கொள்வதற்காக 02 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், விரிவான வருமானக் கூற்றில் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் கூற்றில் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தின் கீழ் அந்த மூலதன மானியம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மூலதன மானியங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஒ) | முன்னைய ஆண்டில் ரூபா 7,633,946 மூலதன மானிய பெறுமதியில் 10 சதவீத அளவு அதாவது ரூபா 763,394 தொகை விரிவான வருமானக் கூற்றில் வருமானத்தின் கீழ் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும், அது ரூபா 2,235,958 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் மிகை ரூபா 1,472,564 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | மூலதன மானியங்களுக்குரிய பெறுமதி சரியான கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஓ) | முன்னைய ஆண்டில் மூலதன மானிய பெறுமதியில் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய காலக் கழிவின் பெறுமதி சீராக்கப்பட்டதன் பின்னர் மிகுதி பெறுமதி ரூபா 6,870,552 தொகை மற்றும் மீளாய்வாண்டின் போது கிடைத்த மூலதன மானியம் ரூபா 6,275,322 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 13,145,874 ஆக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் தேறிய சொத்துக்களின் இனங்காணப்படாத மூலதன மானியமாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்படுகின்ற மூலதன மானியங்களின் பெறுமதி சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஔ) | கொரோனா நோய் நிலைமையின் கீழ் மரணமடைந்தவர்களின் உடலை இலவசமாக எரியூட்டுவதற்காக சபையினால் செலவிடப்பட்ட செலவினத்தை மீளளிப்பு | ரூபா 4,745,520 தொகை வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு 2.9.431(iii) மற்றும் | கிடைக்கின்ற வருமானத்தை சரியான கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்காக ரூபா 4,745,520 தொகை கிடைத்திருந்த போதிலும், இந்த தொகை விரிவான வருமானக் கூற்றில் வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அப்பெறுமதியால் ஆண்டின் மிகை குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | 2.9.434 என்ற செலவின தலைப்புக்களில் செலவு வைக்கப்பட்டுள்ளது. அது விரிவான வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (க) | உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து ஊழியர் சம்பளமாக ரூபா 782,696,000 மீளளிப்பு செய்யப்பட்டிருந்த போதிலும், விரிவான வருமானக் கூற்றில் வருமானத்தின் கீழ் ரூபா 745,642,175 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 37,053,825 இனால் வருமானம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சம்பள மீளளிப்பிற்கு உரியதாக சீராக்கப்பட்ட நாட்குறிப்பின் பிரகாரம் மீதி ரூபா 745,642,175 ஆக கணப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், இதனை மீண்டும் கவனத்தில் கொண்டு 2022 ஆம் ஆண்டில் சரி செய்து கணக்கு வைக்கப்படும் என அறியத்தருகின்றோம். | மீளளிப்பு செய்யப்பட்ட பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கா) | ரூபா 2,449,030 பெறுமதியான ஆயர்வேத மருந்து இருப்பு, இருப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ரூபா 2,449,030 பெறுமதியான ஆயர்வேத இருப்பு கைத்தவறினால் கணக்கு வைக்கப்படாதிருந்ததுடன், அது 2022 ஆம் ஆண்டின் போது கைவிடல்களின் கீழ் கணக்கீடு செய்யப்படும் என அறியத்தருகின்றோம். | இருப்புக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (கி) | மாகாண சபை மற்றும் பண்முகப்படுத்தப்பட்ட செயற்திட்ட கடன்பட்டோர் பெறுமதி ரூபா 7,484,457 ஆக இருந்த போதிலும், அது நிதிக் கூற்றுக்களில் ரூபா 10,031,968 ஆக காண்பிக்கப்பட்டமையால் சொத்துக்கள் ரூபா 2,547,511 அதிகரித்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணிப்பீடு செய்யப்பட்ட தவறினால் இது கணக்குகளில் இது கணக்குகளில் ரூபா 10,031,968 என காண்பிக்கப்பட்டு அதனை மீண்டும் கண்டறிந்து 2022 ஆம் ஆண்டில் சரி செய்து கணக்கு வைக்கப்படும் என அறியத்தருகின்றோம். | செயற்திட்ட கடன் பட்டோர் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 10 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளையும், அவற்றுக்குரிய உபயோக ஆவணங்கள்/ அறிக்கையில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளையும் ஒப்பீடு | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | |
|---|---|
| செய்த போது, நிதிக் கூற்றுக்களில் ரூபா 4,188,983 குறைத்தும் மற்றும் ரூபா 20,446,435 அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,114,684,584 ஆன 07 கணக்கு விடயங்களுக்காக உடன்படிக்கை மீதி உறுதிப்படுத்தல் மற்றும் பட்டோலைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்காமையின் காரணமாக கணக்காய்வின் போது அவற்றை சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2022 இன் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது இந்த அறிக்கை மற்றும் பட்டோலைகள் வழங்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான சான்றுகள் தாமதமின்றி வழங்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சேஷலிச குடியரின் நிதிப் பிரமாணம் | | | | |
| (அ) | நிதிப் பிரமாணம் 104(1) மற்றும் (3) | ஏதாவது ஒரு இழப்பீடு ஒன்று தொடர்பாக முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஏழு நாட்களுக:கு மேற்பட்ட தாமதம் ஏற்படுமாயின் ஆரம்ப அறிக்யையொன்று சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், 2019 நவம்பர் மாதம் ஏற்பட்ட ஆதன வரி மேசடி தொடர்பாக சபையினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிதி மோசடி தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படுவதுடன் 2022 யூன் மாதம் அடுத்த தவணை முறை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒழுக்காற்று விசாரணைகள் முடிவடைந்ததுடன் உரிய சகல அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஆரம்ப மற்றும் இறுதி அறிக்கை தாமதமின்றி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 486 (ஆ) மற்றும் (2) | 2002 முதல் 2021 வரையான காலப் பகுதியில் சபைக்கு வழங்கப்பட்ட 23 காசோலைகள் மதிப்பிழந்திருந்த | இந்த மதிப்பிழந்த 23 காசோலைகளில் 02 காசோலைகளின் பெறுமதியான ரூபா 32,250 தொகை 2022 ஆம் ஆண்டில் | மதிப்பிழந்த காசோலைகளுக்கா க பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும், இந்த காசோலைகளுக்காக பணத்தை மீள அறவிடுவதற்கோ அல்லது உரிய கடன்பட்டோர் கணக்கில் வரவு வைப்பதற்கோ உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அறவிடப்பட்டுள்ளது. மிகுதி காசோலைகளில் ரூபா 30,000 தொகை ஆதன வரிக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவாக இருந்தமையால் அந்த கணக்கில் வரவு வைத்து நாட்குறிப்பு பதிவுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். இதில் கடை வாடகைக்காக செலுத்தப்பட்ட ரூபா 100,000 வீதம் ஆன 03 காசோலைகள் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சட்ட உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மிகுதி மதிப்பிழந்த காசோலைகளை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (இ) | நிதிப் பிரமாணம் 880 மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அதிகாரம் | பிணை வைக்க வேண்டிய அரசாங்கத்தின் உத்தியோகத்தர்கள் பிணை வைக்க வேண்டியிருந்த போதும் மாநகர சபையின் வருமானத்தை சேகரிக்கும் உத்தியோகத்தர், வருமான முத்திரை அல்லது பொருட்கள் போன்றவை பொறுப்பில் இருக்கின்ற நிர்வாக ரீதியாக பொறுப்புடைய அல்லது அதிகாரம் கையளித்தலின் கீழ் நடவடிக்கை எடுக்கின்ற உத்தியோகத்தர்கள் உறுதிச் சீட்டுக்களை உறுதிப்படுத்துகின்ற காசோலைகளில் கையொப்பமிடுகின்ற உத்தியோகத்தரிடம் இருந்து பிணை பெறப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எதிர் காலத்தின் போது மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பிணை வைக்க வேண்டிய அரசாங்க உத்தியோகத்தரிடம் இருந்து தாமதமின்றி பிணைப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 136,192,585 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,003,930 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரி | | |
| (i) மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட ஆதன வரி வருமானம் ரூபா 387,751,686 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 130,730,105 தொகை அதாவது 35 சதவீதத்தை அறவிடுவதற்கு தவறியிருந்தது. அவ்வாறே கடந்த ஆண்டின் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 430,797,789 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 348,306,737 அதாவது 81 சதவீதத்தை அறவீடு செய்வதற்கு சபை தவறியிருந்தது. | கொரோனா தொற்று நோய் அதிகரித்தமையின் காரணமாக 2021 ஆம் ஆண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் 2021.12.31 இல் உள்ளவாறு நிலுவை தொகையை சேகரித்துக் கொள்வதற்கு வசதியீனமாக இருந்தது. எனினும் 2022.04.30 ஆம் திகதி வரையில் 2020.12.31 இல் உள்ளவாரு நிலுவை ஆதன வரி மீதி மற்றும் 2021.12.31 இல் உள்ளவாறு நிலுவை ஆதன வரி மீதி போன்ற இரண்டினதும் கூட்டுத் தொகை ரூபா 56,812,222 அளவு 2022.04.30 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) ஆதனவரி செலுத்துவதற்காக பெறப்பட்டிருந்த பெறுமதி ரூபா 792,430 ஆன 10 காசோலைகள் மதிப்பிழந்திருந்ததுடன், அதற்காக மீண்டும் பணத்தை பெற்றுக் கொள்ளாமல் ஆதன வரி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆதனங்களின் உரிமையாளருக்கு மீண்டும் பணத்தை செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு உரிய ஆதனவரி கணக்குகளில் செலுத்த வேண்டிய மீதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தின் போது இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பிழந்த காசோலைகளுக்காக மீண்டும் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரு ஆதன வரி மீதி அறவிட முடியாத ஆதனங்கள் 86,000 அளவாக காணப்பட்டதுடன், அதில் 43,030 | அறவிடுவதற்கு காணப்பட்ட ரூபா 216,162,755 தொகையில் ரூபா 8,429,678 தொகை 2022.04.30 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆதனங்கள் ரூபா 483,881,071 ஆன ஆதன வரி நிலுவை காணப்பட்டது. இந்த நிலுவையில் ரூபா 100,000 தொகைக்கு மேற்பட்ட பெறுமதியுடைய 654 ஆதன வரி அலகுகள் இருந்து ரூபா 207,733,077 தொகை அறவிட வேண்டியிருந்தது. | நாட்டில் காணப்பட்ட மற்றும் தற்போது நாட்டில் காணப்படுகின்ற சிக்கலான நிலைமைகள் இந்த நிலுவை பணத்தை சேகரிக்கும் போது தாக்கமலித்திருந்தது. | |
| (iv) | பரிவர்த்தணை கோபுரங்கள் காணப்படுகின்ற 24 ஆதனங்களில் இருந்து 2021 திசெம்பர் 31 இல் அறவிட வேண்டியிருந்த நிலுவை வீத வரி மற்றும் பரிவர்த்தணை கோபுர வருமானம் ரூபா 6,454,787 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிவர்த்தனை கோபுரங்களுடன் காணப்படுகின்ற ஆதனங்களின் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக ஆதன உரிமையாளர்களுக்கு எழுத்து மூலமும் தொலைபேசி அழைப்பு மூலமும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கழிவுப் பொருள் வரி<br>----------------------------------- | | |
| | சபையினால் கழிவுகள் அகற்றப்படுகின்ற வியாபார நிலையங்களுடன் உடன்படிக்கை செய்யாமையினால் நிலுவை கழிவுப் பொருள் வரியை அறவிடும் போது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தது, அவ்வாறே 2003 நவம்பர் 18 ஆம் திகதிய 08(10)35 ஆம் இலக்க சபை தீர்மானம் மற்றும் நிதி செயற்குழுவின் ஆலோசனையின் படி நிலுவை கழிவுப் பொருள் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கழிவுப் பொருளின் பெறுமதி ரூபா 12,249,021 ஆக காணப்பட்டது. | திருத்தப்பட்ட கழிவுகளை அகற்றும் விண்ணப்பம் புதிய பதிவு செய்தலின் கீழ் நிறுவனத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது. இந்த திருத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட லோட்களின் எண்ணிக்கை உரிய குறித்துரைத்த கழிவுப் பொருள் கட்டணம் செலுத்துதலாக அவ்வாறு செலுத்துதல் புறக்கணித்தமையால் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் படி சட்ட ரீதியான நடவடிக்கை குறிப்பிட்டு கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் புதிய விண்ணப்பப்பத்திரத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்ற புதிய நிறுவனங்களில் நிலுவை கட்டணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.<br>2021.12.31 இல் உள்ளவாரு நிலுவை கழிவுப் பொருள் வரி வருமானத்தில் 2022.05.19 ஆம் திகதி வரையில் ரூபா 4,956,677 தொகையான வருமானம் நகர சபைக்கு கொவிட் தொற்று நோய் நிலைமையினால் காணப்பட்ட | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சந்தர்ப்பத்தின் போது அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதி நிலுவை கழிவுப் பொருள் வருமானத்தை அறிவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | |
| (இ) ஏனைய வரிகள் | | |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரு நிலுவை கேபில் ரீ.வீ வருமானம் ரூபா 4,718,601 மற்றும் அறிவித்தல் பதாதை நிலுவை மீதி ரூபா 13,918,749 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | லங்கா புரேட்பேன்ட் நிறுவனத்திற்கு சொந்ததமான செல்லுபடியான அனுமதிப் பத்திரம் 2016.12.22 ஆம் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனத்திற்கு சொந்தமான இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்டுள்ள செல்லுபடி அனுமதிப் பத்திரமாக இருக்கவில்லை. சபையின் சட்ட உத்தியோகத்தரால் கொடுப்பனவுகள் குறைக்கப்படுகின்றமை தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கும் போது அறிந்து கொள்வதற்கு பெறப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) கடை வாடகை | | |
| (i) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வாடகை மீதி ரூபா 7,351,211 இனால் ரூபா 4,660,191 அதாவது 63 சதவீதம் மீளாய்வாண்டிற்கான இறுதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 14,722,000 ஆக இருந்த போதிலும் அதில் ரூபா 6,295,271 தொகை அதாவது 43 சதவீதம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட மற்றும் காணப்படுகின்ற பாதகமான நிலைமையின் காரணமாக வாடகையாளர்களுக்கு ஒழுங்குமுறையாக செலுத்துவதற்கு வசதியீனமாக இருந்தது. இந்த நிலுவையில் 2022.05.29 ஆம் திகதி வரையில் ரூபா 4,284,486 தொகை அறவிடப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) கடை உடன்படிக்கையின் 19 வின் பிரகாரம் குறித்துரைத்த திகதியில் வாடகை செலுத்தாமல் தொடர்ச்சியாக 03 காலங்கள் வாடகை செலுத்தாதிருக்குமாயின் வாடகை உடன்படிக்கை இரத்துச் | முன்னர் ஏற்பட்டிருந்த கைத்தவறினால் சரி செய்தததற்கு எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படுவதற்கு கண்காணித்து கொள்ளப்படுவதுடன், அறவிட | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டு வாடகையாளர் அந்த இடத்தில் இருந்து விலகிச் செல்வதற்கும் நிலுவை வாடகை உள்ளடக்கிய சபைக்கு செலவிட வேண்டியிருந்த சகல நட்டமும் மற்றும் இழப்பு நட்டம் வாடகையாளரிடம் இருந்து சட்ட ரீதியாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், வாடகையை அறவீடுகள் நிலுவையான 128 கடைகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டிய நிலுவை பணத்தை அறவிட்டு காணப்படுகின்ற மீண்டும் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (iii) | நீண்ட காலம் முதல் நிலுவை வாடகை காணப்பட்ட 27 கடைகள் முத்திரை வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த கடைகளில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 1,644,177 ஆகும். | சட்ட உத்தியோகத்தரின் ஆலோசனையின் பிரகாரம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ஆதன வாடகை (குத்தகை)<br>---------------------------------------------- | | |
| | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரு 17 ஆதனங்களில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை ஆதன வாடகை ரூபா 6,516,799 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவையில் 2022.05.29 ஆம் திகதி வரையில் ரூபா 519,739 அறவிடப்பட்டுள்ளது. காணப்படுகின்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் நிலுவை ஆதன வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | அனுமதிப்பத்திரக் கட்டணம்<br>---------------------------------------------- | | |
| (i) | 2021 ஆம் ஆண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்க வேண்டியிருந்த விற்பனைக் கடைகள் 1887 காணப்படுகின்றமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 889 விற்பனைக் கடைகள் அனுமதிப்பத்திரம் பெறாமல் அதாவது அனுமதிப்பத்திர கட்டணம் செலுத்தாமல் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. மேலும் 2021 ஆம் ஆண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரம் கோரிய 20 வியாபார நிலையங்கள் பணம் செலுத்தி அனுமதிப்பத்திரம் | இந்த எண்ணிக்கையில் 401 விற்பனைக் கடைகளின் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. அதன் பெறுமதி ரூபா 3,465,857 ஆகும். 2022.05.27 ஆந் திகதி வரையில் மேலும் 167 விற்பனைக் கடைகளின் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ளதுடன் அதன் பெறுமதி ரூபா 1,152,954 ஆகும். 2022.06.30 ஆந் திகதியின் பின்னர் வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தின் போது அனுமதிப்பத்திரம் பெறாதுள்ள | வருடாந்த வியாபார அனுமதிப்பத்திர வருமானத்தைப் பெற்றுக்கொவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அனுமதிப்பத்திரம் பெறாத வியாபாரங்களுக்காக வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்முடும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறாதிருந்தமையினால் சபைக்கு கிடைக்கவேண்டிய அனுமதிப்பத்திர கட்டண வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | விற்பனைக் கடைகளுக்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கைத்தொழில் மற்றும் வரி மீதி ரூபா 95,006,513 மற்றும் வியாபார அனுமதிப்பத்திர நிலுவை மீதி ரூபா 5,424,142 தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரம் செலுத்தாத வியாபாரிகளுக்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | நீதிமன்ற தண்டப்பணம்<br>---------------------------------------- | | |
| (i) | 2017 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலப் பகுதிக்குரிய நீதிமன்றத்தால் அறவிடப்பட்ட தண்டப் பண பெறுமதியாக ரூபா 58,081,925 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது சபைக்கு அந்த பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 நவம்பர் மாதம் வரை நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 5,516,750 தொகை தற்போது வரையில் அறவிடப்பட்டுள்ளது. 2017 ஒக்டோபர் முதல் 2018 திசெம்பர் வரை நீதிமன்ற தண்டப்பணம் உப நிரல் தயாரித்து பரீட்சிப்பதற்காக கல்கிஸ்ஸ நீதிமன்ற அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. 2019 சனவரி முதல் திசெம்பர் வரை நீதிமன்ற தண்டப்பணம் பதிதல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. உப நிரல்கள் தயாரிக்கப்படுகின்றது. | நீதிமன்ற தண்டப்பண வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 1994 இன் 04 ஆம் இலக்க நீதிமன்ற தண்டப்பணம் தண்டங்களை கையளித்தல் விஞ்ஞாப கட்டளையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்படுகின்ற ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி முதல் 05 வருடங்களுக்குள் அந்த தண்டப்பணம் அறவிட்ட நீதிமன்றத்தின் பதிவாளரால் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் கோரிக்கை சமர்ப்பித்து சபைக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறே | 2016 ஆம் ஆண்டில் நீதிமன்ற தண்டப்பணம் சேகரித்தல் தொடர் இலக்கம் ஒழுங்கு முறையாக மேற்கொள்ளப்பட்ட போதும் அந்த தவறு சரி செய்யப்பட்டு நீதிமன்ற தண்டப்பணத்தை சேகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நீதிமன்ற தண்டப்பணம் வருடாந்தம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 38,058,207 தொகையை அறவிடுவதற்கான காலம் மேற்கூறப்பட்ட கட்டளையின் பிரகாரம் முடிவடைந்திருந்தமையினால் அந்த பெறுமதி திரண்ட நிதியத்தில் வரவு வைத்து கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டது. | | |
| (iii) | மீளாய்வாண்டின் போது நீதிமன்ற தண்டப்பணமாக சபைக்கு எந்தவொரு வருமானமும் கிடைக்கப் பெறாதிருந்ததுடன், விரிவான வருமானக் கூற்றில் நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 12,000,000 மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் ஒவ்வொரு ஆண்டிலும் அந்த பெறுமானத்தால் ஆண்டின் மிகை அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. | 2017 ஒக்டோபர் மாதம் முதல் மற்றும் 2018 ஆம் ஆண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பண பட்டோலைகள் தயாரித்து பரீட்சிப்பதற்காக கல்கிஸ்ஸ நீதிமன்ற அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் 2019 இன் நீதிமன்ற தண்டப்பணங்கள் எழுதி முடிவடைந்தவுடன் பட்டோலை தயாரிக்கப்பட்டுகின்றது. | பெறவேண்டிய வருமானத்தை தாமதமின்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நிதிப் பிரமாணம் 156 தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

**2.2 மிகை கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 1974 ஆம் ஆண்டு 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,563,042 தொகை அறவிட வேண்டியிருந்தது. | கோவைகள் சட்டப் பிரிவிற்கு அனுப்பட்டடுள்ளது. | மிகை கட்டண மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 நவம்பர் 11 ஆம் திகதி முதல் 2016 ஏப்ரல் சேவையை கைவிட்டுச் சென்ற ஊழியர் ஒருவருக்காக ரூபா 1,413,903 சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த தொகையை மீள | ஆரம்ப விசாரணைகள் மேற்கொண்டு உத்தியோகத்தர்களை இனங்காணப்பட்டுள்ளதுடன், முறையான ஒழுக்காற்று பரிசோதனை ஒன்றினை நடத்துவதற்காக குற்றப்பத்திரிகை | பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | வரைவுடன் ஆரம்ப விசாரனைக் கோவை உள்ளூராட்சி ஆணையாளர் (மே.மா) இற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2019 நவம்பர் 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ரூபா 145,470 ஆன ஆதன வரி நிதி மேசடி தொடர்பான நட்டத்தை அறவிடுவதற்கு, ஒழுக்காற்று நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த நிதி மோசடி தொடர்பாக இந்த முறையாக விசாரணை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுன், 2022 யூன் மாதம் அடுத்த தவணைக் கூட்டம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்தி நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **தகவல்களை கண்டறியும் சட்டம்**<br>பொது மக்களினால் கோரப்பட்ட தகவல்களை அறிக்கையிடுவதற்காக பிரதான தகவல் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. அதனால் தகவல் கோரல் தொலைந்து போனமை, பதிலளிக்கப்படாமை மற்றும் நிராகரிக்கப்பட்டமை போன்ற நிலைமை தொடர்பாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | தகவல்களை கோரும் போது அது முதலாவதாக நகர ஆணையாளருக்கு அனுப்பப்படுவதுடன், அதன் பின்னர் பிரதி நகர ஆணையாளருக்கு அனுப்பப்படுகின்றது. அதன் போது உரிய திணைக்களத்தில் இருந்து பதில் தயாரித்து திணைக்கள தலைவரின் கையொப்பத்துடன் பதில் கடிதத்தின் பிரதியொன்று பின்தொடர் நடவடிக்கைகளுக்காக பிரதி நகர ஆணையாளருக்கு அனுப்பப்படுகின்றது. பிரதி நகர ஆணையாளரின் கீழ் இந்த பிரதான கோவைகள் பேணிச் செல்லப்படுகின்றது. | கோவைக்கு மேலதிகமாக பிரதான தகவல் பதிவேடொன்று சகல தகவல்களையும் கோரும் கடிதங்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதி விளக்குகள் மற்றும் பராமரிப்புக்கள்**<br>சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வீதி விளக்குகளின் தூண்களை இனங்காணப்பதற்கு இலக்கமிடல் முறைமையொன்றுடன் வீதி | சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்கு தூண் இலக்கம் இடப்பட்டு புள்ளி விபரங்கள் தயாரிப்பதற்காக | வீதி விளக்கு தூண்களை இனங்காண்பதற்கு இலக்கமிடும் முறைமையொன்று அமுல்படுத்தப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | விளக்கு பதிவேடு பேணிச் செல்லப்படாதிருந்ததுடன், ஒவ்வொரு வீதி விளக்கு தூண்களுக்காக சபை வருடாந்தம் எவ்வளவு தொகையை செலவளிக்கின்றது எனவும், எவ்வளவு காலத்திற்கு ஒரு தடைவ மின் குமிழ்கள் மற்றும் ஏனைய துணைப்பாகங்கள் பொருத்தப்படுகின்றன என்பது தொடர்பாகவும் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | சபையின் வலய பிரிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் இல்லாமையினால் சபை தீர்மானத்தின் அடிப்படையில் தனியார் துறையில் இருந்து இந்த பணியை நிறைவேற்றுவதற்காக கூறுவிலை கோரப்பட்டிருந்தது. மதிப்பீட்டு குழு அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கும் போது ஆகக் குறைந்த விலையின் பிரகாரம் ரூபா 10,900,000 மேலதிகமான கிரயமொன்றை செலவிட வேண்டி ஏற்படுகின்றமையினால் அதன் நிறைவேற்றல் நிராகரிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | சந்தை நிலைய வாடகை | | |
| | வாடகை நிலுவை காணப்பட்ட சபைக்கு சொந்தமான கடைகளை வாடகைக்கு வழங்கியிருந்த போதிலும், வாடகையாளர்களுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சில உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தை விஞ்சியிருந்த போதிலும், மீண்டும் உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகளில் காணப்படுகின்ற குறைபாடுகளை நாளது வரையாக்கி உடன்படிக்கை செய்யப்படாத வாடகையாளர்களுடன் உடன்படிக்கை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | வாடகைக்கு வழங்கும் போது உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திடல் மற்றும் உடன்படிக்கை காலத்தை விஞ்சிய உடன்படிக்கைகள் மீண்டும் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகணரங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீண்ட காலம் முதல் மூடப்பட்டு முத்திரை வைக்கப்பட்டுள்ள 27 கடைகளை மீண்டும் கையேற்று ஏனைய வாடகையாளர்களுக்கு வாடகைக்கு வழங்கி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கேள்வி கோருதலுக்கு முடியாதிருந்தமையால் இந்த தெஹிவலை மத்திய சந்தையை அகற்றி புதிய சந்தையை நிர்மாணிக்கும் யோசனை காணப்பட்டது. 2022 யூன் மாதம் 23 ஆம் திகதி நிதிக் குழுவின் போது இது தொடர்பாக தீர்மானத்தை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | கடைகளை வாடகைக்கு வழங்கி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ரூபா 25,751,793 கிரயத்தினை செய்து தெஹிவலை நாட்சந்தையில் நிர்மாணிக்கப்பட்ட 25 கடைகள் வாடகையாளர்களுக்கு வழங்கும் போது மீளாய்வாண்டில் வாடகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தெஹிவளை காலி வீதி புதிய சந்தை தொகுதியை நிர்மாணித்து வாடகைகள் 10 கடைகளுக்கு தின சந்தையில் தொடர்ச்சியாக வாடகை செலுத்தப்பட்ட 10 வாடகையாளர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த வாடகையாளர்கள் சபை மதிப்பீட்டுக்கு இனங்காமையால் இந்த வாடகைக்கு வழங்கும் உரித்து கௌரவ ஆளுனரின் அங்கீகாரத்திற்கு தேவையாக இருந்தமையால் அதன் காரணமாக இரண்டு அடிப்படையில் ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்த குறைபாடுகளாக இந்த சந்தைத் தொகுதிக்குரிய கடைகளின் பின்பக்கமும் பிடித்து வைக்கப்பட்டிருந்தது. அதற்காக தற்போது வரையில் உரித்துறுதி தயாரிக்கப்படுகின்றது. (சட்டப்பிரவின் மூலம்) இதன் போது மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் காணப்படாமையால் வாடகையாளர்கள் வாடகை செலுத்துதலை புறக்கணித்து இருந்தனர். எனினும் மின்சார வசதிகளுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன், நீர் வசதிகளை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்த உடன் மிகுதி கடைகளுக்காக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. | வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் 73 கட்டிட ஆதனங்களில் 34 ஆதனங்களின் உரித்தை உறுதிப்படுத்துதல் தொடர்பாக தேவையான உரித்துறுதி கையளித்தல் கட்டளை காணப்படாதிருந்ததுடன், காணியின் அளவு (பரப்பளவு) அளவிடப்படாதிருந்த ஆதனங்களின் எண்ணிக்கை 24 ஆகும். | சகல காணிகளையும் அளவிட்டு உரித்து சான்றிதழ் பெறப்படுவததற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | காணிகளை அளந்து உரித்துறுதி சான்றுதழை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான காணிகள் தொடர்பாக வருடாந்தம் சொத்துக்கள் மெய்மெய்யாய்வு செய்யப்பட்டு நீண்ட காலம் முதல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், காணி தொடர்பான சரியான மேற்பார்வை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்படாமையினால் சபைக்குச் சொந்தமான காணிகளில் வேறு நபர்களால் அனுமதியற்ற வகையில் விடுத்து வைக்கப்பட்ட 5 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் காணியை இனங்கண்டு அதனை பாதுகாக்கும் வேலியை நிர்மாணித்து சபைக்குச் சொந்தமான இருந்தமைக்கு பெயர் பதாதை பொருத்துவதற்கு நிர்னயிக்கப்பட்டுள்ளது. விம்சபியவின் மூலம் அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொண்டு இறுதியாக சபைக்குச் சொந்தமான காணிகளுக்கும் உரித்துறுதி சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அனுமதியற்ற கைப்பற்றல்கள் எடுத்தல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான 01 றூட் 4.19 பேர்ச் பரப்பளவான கல்கிஸ்ஸ வத்த காணியின் பொது மலசலகூடம், இரத்மலானை பிரதேச செயலாளரால் வாடகைக்கு வழங்கப்பட்டதாக காண்பிக்கப்பட்ட போதிலும், அந்த காணியின் பொது மலசலகூடம் காணப்படாதிருந்ததுடன், காணியை வாடகைக்கு வழங்கி சபைக்கு எந்தவொரு வருமானமும் பெற்றிருக்கவில்லை. அவ்வாறே வெளித்தரப்பினரால் இந்த காணி அனுமதியற்ற வகையில் உரிமை கொண்டாடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | சபைக்கு சொந்தமாக காணப்படுகின்ற ஆதனங்கள் பதிவேட்டில் கல்கிஸ்ஸவத்த பொது மலசலகூடத்துடன் காணியாக இனங்காணப்பட்ட காணி (1 ரூட் 4 பேர்ச்) குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த காணி இலக்கமாக 393,292 குறிப்பிடப்பட்டுள்ளது. அனுமதியற்ற நிர்மாணங்களை ஏற்படுத்தி சபைக்குச் சொந்தமான சகல காணிகளுக்காகவும் அது தொடர்பாக | அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் விரிவாக எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முறையான வகையில் (சகல அனுமதியற்ற நிர்மாணங்களுக்காக) நடவடிக்கை எடுப்பதற்கு சபை தீர்மானித்துள்ளது. | |
| (ஈ) | கல்கிஸ்ஸ ஹோட்டல் வீதியில் இலக்கம் 4/89 என்ற காணி திட்டத்தின் 01 ரூட் 4.10 பர்ச் அளவான காணி வாகன தரிப்பிடமாக பயன்படுத்துவதற்காக 30 வருட காலத்திற்காக 1991 யூன் 01 ஆம் திகதி கல்கிஸ்ஸ ஹோட்டலுக்கு வழங்கப்பட்டிருந்தது. நகர சபைக்குச் சொந்தமான இந்த ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் போது உடன்படிக்கைகளில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாகக் கொண்டு 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இந்த ஆதனத்தின் நிலுவை வாடகை ரூபா 4,768,561 ஆக இருந்த போதிலும் அந்த வாடகைப் பணத்தை வாடகையாளரிடம் இருந்து அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன், உடன்படிக்கை செய்யப்பட்ட காலமும் 2021 மே 31 ஆம் திகதியில் முடிவடைந்திருந்தது. | கல்கிஸ்ஸ ஹோட்டலில் வாகன தரிப்பிடத்திற்காக சபைக்குச் சொந்தமான 25 பேர்ச் அளவில் வாடகைக்காக 30 வருடங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் இந்த வாடகைக் காலம் முடிவடைந்திருந்தது. காணியின் அளவிடல் நடவடிக்கைகளை மேற்கொண்டு மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்கு வாடகை உடன்படிக்கை தயாரிக்கப்படுகின்றது. | அறவிட வேண்டிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 செயற்றிட்டம், இலக்குகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரேசர் விளையாட்டு அரங்கில் உள்ளக விளையாட்டு அரங்கை நிர்மாணிப்பதற்காக ரூபா 50,000,000 செலவினம் ஒன்று 2018 இன் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும், 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இந்த பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2014 மார்ச் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தெஹிவலை பொது விளையாட்டு அரங்கு | பிரேசர் விளையாட்டு அரங்கின் உள்ளக விளையாட்டு அரங்கை நிர்மாணிக்கும் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் ஆலோசனை நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டு 2019.10.18 ஆம் திகதி கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. அந்த சமர்ப்பித்த நிறுவனம் இந்த செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு போதியளவான | வேலைகளை பூர்த்தி செய்தல் தாமதமின்றி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் விளையாட்டு கட்டிட தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | தகைமைகளை பூர்த்தி செய்யாதிருந்தமையால் ஆலோசனை நிறுவனத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மீண்டும் 2022.06.26 ஆம் திகதி கேள்வி கோரி ஒப்பந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு இந்த நிர்மாண வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2022.10.03 ஆம் திகதியில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | வனரத்தன வீதி முதல் பொன்சேகா வீதி வரை வீதியை திறப்பதற்காக காணியை கைப்பற்றுவதற்கு 2018 பெப்ரவரி மாதம் ரூபா 4,500,000 பிரதேச செயலாளருக்கு வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் காணியை கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியில் ஒரு பகுதி இலசவமாக வழங்கப்பட்டிருந்த போதிலும் ஏனைய பகுதிக்கு எதிர்ப்பு வெளிப்பட்டிருந்தது. எதிர்ப்பு வெளியிட்டவரின் காணியை பெற்றுக் கொள்வதற்காக காணி கையேற்றல் சட்டத்தின் 38(அ) உப பிரிவின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் படி ரூபா 4,500,000 தொகையை கைப்பற்றுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய பிரகாரம் தேவையினை இனங்கண்டு அத்தியவசிய செயற்திட்டங்களை மாத்திரம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 501(ஈ) இன் பிரகாரம் அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொடர்பாக முற்பண கணக்குகளில் நட்டம் ஏற்படும் என | 2022 ஆம் ஆண்டில் ரூபா 10,000 தொகைக்கு மேற்பட்ட கடன் மீதியை அறவிடுவதற்கும், ரூபா | கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்படாதிருந்த போதிலும், கடன் செலுத்துவதற்காக அதிகார பலத்தை வழங்கும் போது குறித்துரைத்த நிபந்தனையின் பிரகாரம் முழுத்தொகையும் அறவிட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் சபையில் 2021 திசெம்பர் 30 இல் உள்ளவாறு ரூபா 5,275,635 ஆன கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | 10,000 தொகைக்கு குறைந்து காணப்படுகின்ற கடன் மீதியை புத்தகங்களில் இருந்து பதிவலிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 24 ஆம் திகதிய 2155/6 ஆம் அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தின் 08 ஆவது பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்கு ஒத்ததாக அடுத்து வரும் நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் ஒரு மாதம் தாமதித்து 2022 மார்ச் 28 ஆம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நோய் நிலைமையுடன் அலுவலகத்திற்கு உத்தியோகத்தர்களின் வருகை குறைந்து காணப்பட்டது. அதனால் குறித்துரைத்த பிரகாரம் கணக்கு தகவல்களை சேகரித்துக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டமையால் இந்த நிலைமை ஏற்பட்டதுடன், சரியான திகதியில் கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் கண்காணித்துக் கொள்ளப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதிக்கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் உரிய பிரகாரம் தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டிற்காக தற்போது தயாரிக்கப்படுகின்றது. | வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் செயல் நடவடிக்கை திட்டம் தயாரித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |